# உபநிடதங்கள் போதிக்கும் ஒழுக்கவியல் சிந்தனைகளின் முக்கியத்துவம்: ஓர் மெய்யியல் நோக்கு

**Pulenthiran Nesan**[118]

**ஆய்வுச் சுருக்கம்**

மெய்யியலின் பிரதான வகையான இந்திய மெய்யியல் ''தரிசனம்'' என அழைக்கப்படுகின்றது. தரிசனம் என்பது காட்சி எனவும், உள்ளுணர்வால் புரிந்து கொள்ளப்படும் சிந்தனை எனவும் பொருள் கொள்ளப்படுகின்றது. இவ் இந்திய தரிசனங்களுக்கெல்லாம் அடிப்படையாகவும், முதலில் தோற்றம் பெற்ற காலப்பகுதியாகவும் அமையப்பெறுவது வேதகாலம் ஆகும். இது சிந்துவெளிக்காலத்தை அடுத்து ஏறத்தாழ கி.மு 1500ஆம் ஆண்டளவில் நிலவியதென்பது ஆய்வாளர் பலரும் பொதுவாக ஏற்றுக்கொண்ட கருத்தாகும். அதன் இறுதிப்பகுதியாக கருப் பெற்றதே உபநிடதங்களாகும். உபநிடதங்கள் வேதாங்கம், வேதாந்தம் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றன. இவ்வாறு உபநிடதங்கள் வேதாங்கம் என்று பெயர் பெறுவதற்குக் காரணம் அவை வேதத்தின் முடிந்த முடிவாகவும், வேதத்தின் உட்பொருளை விளக்குவதாகவும், வேதத்தின் சாராம்சமாகவும் விளங்குகின்றமையே ஆகும். அதே போன்று உபநிடதங்கள் வேதங்களின் இறுதியாகப் போதிக்கப்பட்டமையால் வேதாந்தம் (வேத+அந்தம்) என்ற பெயரைப் பெறுகின்றன. இதிலிருந்து வேதங்களிற்கும் உபநிடதங்களுக்குமிடையிலுள்ள தொடர்பு நன்கு பெறப்படுகின்றது. அச் சிந்தனைகளில் ஒழுக்கம் என்ற விடயம் மிகவும் முக்கியமானதாகும். இது வாழும் முறை அல்லது வாழ்க்கை நெறி எனப்படும். இவ் ஒழுக்கம் பற்றிய மிகச் சிறப்பான சிந்தனைகள் மற்றும் ஆராய்ச்சிகளை உபநிடதங்களில் காணலாம். இவ் ஆய்வானது உபநிடதங்களில் வலியுறுத்தப்படும் ஒழுக்கவியல் சிந்தனைகளை மெய்யியல் ரீதியாக தெளிவுறுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும் வேதத்தின் கிரியை மரபுகளின் கருத்தின்மையை வலியுறுத்தி தோன்றிய உபநிடதங்கள் எவ்வாறான அடிப்படையில் தத்துவத்துடன் ஒழுக்கவியல் சிந்தனைகளை வெளிப்படுத்துகின்றன என்பது முக்கியமான ஆய்வுப் பிரச்சினையாகும். மேலும் இவ் ஆய்வானது முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஆய்வறிக்கைகள், சஞ்சிகைகள், நூல்கள் போன்ற இரண்டாம் தர மூலங்களுடன், விபரணவியல், ஒப்பீட்டு முறை போன்ற ஆய்வு முறையியல்களைப் பயன்படுத்துகின்றது.

**பிரதான சொற்கள்:** மெய்யியல், வேதம், உபநிடதம், ஒழுக்கம்.

## அறிமுகம்

வாழ்வின் உறுதிப் பொருளையும் அதன் முடிவான நோக்கத்தையும் அறிந்து கொள்வதற்கு நடைபெற்று வந்த இடையறா முயற்சியே மெய்யியல் ஆகும். அறிவின் மீதான ஆர்வமாகக் காணப்படும் மெய்யியல் இரண்டு வகைப்படும். அவை, மேலைத்தேய மெய்யியல், கீழைத்தேய மெய்யியல் என அழைக்கப்படுகின்றது. இதிலே கீழைத்தேய மெய்யியல் என்பது பிரதானமாக இந்திய மெய்யியலைக் குறிக்கிறது. இது குறித்து தெளிவாக அறிய வரலாற்றிலே நாம் பின் நோக்கிச் செல்லவேண்டி இருக்கிறது. அதாவது இந்திய மெய்யியலின் பழமையை உணர்த்தும் சொற்களை நாம் இருக்கு வேதத்திலிருந்து காணலாம். இவ் இந்திய மெய்யியலின் ஆரம்ப மற்றும் வளர்ச்சிக்காலமாக வேத மற்றும் உபநிடத கால சிந்தனைகளே விளங்குகின்றன எனலாம். மேலும் இந்திய மெய்யியலை தரிசனங்கள் எனவும் அழைப்பர். அதாவது யதார்த்தமான மனித வாழ்வை அறிந்துகொள்ளும் வகையில் இது உருவாக்கப்பட்டதாகும். இந்திய மெய்யியல் மதங்களுடன் தொடர்புடையவை என்பதனால் அங்கே பல சர்ச்சைகள் நிலவுகின்றன. இச் சர்ச்சைகளை மெய்யியல் நோக்கில் எடுத்தியம்பி விளக்கும் சிறப்பு இந்திய மெய்யியலுக்குரியதாகும்.

இந்திய மெய்யியல் சமயத்தின் பின்னணியிலே தோன்றி வளர்ச்சி பெற்றதாகும். இது வைதீக மற்றும் அவைதீக மரபுகளைக் கொண்டமைந்ததாகும். இதில் வைதீகம் என்பது ஆன்மீகத்துடன் குறிப்பாக விடுதலையுடன் தொடர்புடையதாகும். அதேவேளை அவைதீக மரபிலும் உலோகாயுதம் தவிர்ந்த ஏனைய சமணம், பௌத்தம் போன்றனவும் ஆன்மீகத்துடன் தொடர்புடையதாகும். எனவே இந்திய மெய்யியலில் சமயமும் மெய்யியலும் பிரிக்கமுடியாததாகக் காணப்படுகின்றது. இந்திய மெய்யியல் என்பது தனித்து இந்து மதத்தவர்களுக்கு மட்டும் உரியதன்று. இந்து அல்லது ஹிந்து என்ற பரப்பிலுள்ள இந்துக்களதும், இந்து அல்லாதவர்கள் பற்றியதுமான சிந்தனைகளைக் குறிப்பிடுவதாகும். இதனையே சர்வ தர்சன சங்கிரகத்திலும் "சர்வ" (All School Of Philosophy) என்பது உணர்த்துகிறது.

To whom correspondence should be addressed: pnesan92@gmail.com
[118] Assistant Lecturer, Department of Philosophy, University of Peradeniya.

இந்திய மெய்யியலில் சமயம் தொடர்புபடுவதனால் அது வெறுமனே சடங்கு, நம்பிக்கை என்று அமையாது ஒரு குறிக்கோளினை நாடுவதாக அமைந்திருப்பது இதன் சிறப்பாகும். மேலும் மேலைத்தேய மெய்யியலில் பயன்படுத்தப்பட்ட இருப்புவாதம், இயற்கையியல் வாதம், விமர்சன மெய்யியல் போன்றன இந்திய மெய்யியலிலும் பயன்படுத்தப்பட்டன. மேலும் இன்று பௌதீகவதீதம், ஒழுக்கவியல், உளவியல், அழகியல், அறிவாராய்ச்சியியல் எனப் பல ஆய்வுகளை முன்னெடுப்பதனால் இது சமய மெய்யியல், சமூக மெய்யியல், அழகியல் மெய்யியல், உளவியல் மெய்யியல், வரலாற்று மெய்யியல், அரசியல் மெய்யியல், விஞ்ஞான மெய்யியலெனப் பல துறைகளிலும் கிளை பரப்பி நிற்பதைக் காணமுடிகிறது.

**ஆய்வுப் பிரச்சினை**

இவ் ஆய்வானது வேதங்களின் வளிப்பட்ட உபநிடத சிந்தனைகள் போதிக்கும் ஒழுக்கவியல் சிந்தனைகள் எத்தகைய தன்மைகளைக் கொண்டதாகக் காணப்படுவதை ஆராய்வதை அடிப்படையாகக் கொண்டமையால் ஒவ்வொரு உபநிடதங்களையும் ஆழமான வாசிப்பிற்குட்படுத்தி அங்கு காணப்படும் பல்வேறு கருத்துக்களில் ஒழுக்கவியல் அம்சங்களை அடையாளம் கண்டு ஆய்வில் பயன்படுத்துதல் முக்கிய ஆய்வுப் பிரச்சினையாகக் காணப்படுகின்றது.

**ஆய்வின் நோக்கம்**

இந்திய மெய்யியல் பற்றிய தெளிவையும், அதன் தோற்றகாலமாகவும் ஏனைய பிற்பட்ட கால சிந்தனைகளுக்கெல்லாம் அடிப்படையாக அமைகின்ற வேதகாலத்தின் பிரதான அம்சங்களையும், அதன் ஒரு பிரிவான அதாவது அந்தமாகிய உபநிடதங்களையும் பற்றிய தெளிவை விளக்குவதுடன், உபநிடதத்திலே குரு சீட வழிப்பட்டு வெளிப்படும், வாழ்க்கை வழிகளாகக் காணப்படும் ஒழுக்கவியல் சித்தனைகளை மெய்யியல் ரீதியாக வெளிப்படுத்தி ஆராய்தலும் இவ் ஆய்வின் நோக்கமாகக் காணப்படுகின்றது.

**ஆய்வின் கருதுகோள்**

யாகக் கிரியை மரபுகள், அர்த்தமற்ற மிருக பலிகளை அறவே எதிர்த்து உயரிய அறத்தைப் போதிப்பதாக உபநிடதங்கள் அமைவு நிலை பெறுகின்றன. இவ் ஆய்வில் பின்வரும் கருதுகோள்கள் முன்வைக்கப்படுகின்றது.

- ✓ மனித முற்பிறப்பின் கன்ம வினைகளின் தொடர்பு இவ் வாழ்வில் ஏற்படுகின்றது.
- ✓ நாம் செய்யும் செயல்கள் நமது இன்ப துன்பங்களிற்கு காரணமாகின்றது.
- ✓ உபநிடதங்கள் ஒருவன் வாழ்வில் உயர்வு பெற கடைப்பிடிக்க வேண்டிய விடயங்களைப் பேசுகின்றது.

**ஆய்வு முறையியல்**

உபநிடதங்கள் குரு சீட வளிப்பட்ட மெய்யியல்க் கருத்துக்கள் மூலம் ஒழுக்கவியல் கருத்துக்கள் பெரிதும் வலியுறுத்தப்படுவதனால் அதன் நிறைவான பொருளை தெளிவுபடுத்த விபரண ஆய்வும், ஏனைய சமகால தத்துவ மரபுகளுடன் அதன் அடிப்படை சிந்தனைகளை ஒப்பு நோக்கியும் ஆராய்வதால் ஒப்பீட்டு முறையும் பயன்படுகின்றது.

**வேதங்கள்**

வேதங்களே இந்து மதத்தின் முதல் நூலாகவும், பிரமாண நூலாகவும் விளங்குகின்றது. இது இறைவனால் படைக்கப்பட்டது என்று கூறுவர். இதனையே ''வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்'' என்ற வாக்கியம் கூறுகின்றது. சிந்துவெளிக் காலத்தை அடுத்து வந்த வேத காலமே இந்து சமய மற்றும் இந்திய மெய்யியலின் தொன்மையைப் பற்றி அறிந்துகொள்வதற்கான முக்கியமான காலப் பரிவாகும். சடங்கு, சமயம், மந்திரம், வசியம், மெய்யியலென யாவும் ஒன்று கலந்திருந்த காலமாக இக் காலம் விளங்கியது. இது கி.மு 1500 – 600 வரை நிலவியது.

வேதம் என்பது ''வித்'' என்ற சொல்லிலிருந்து தோன்றியதாகும். வித் என்பது அறிவு என்று பொருள்படும். எனவே வேதம் என்பது அறிவு நூல் எனப் பொருள்படும். இவ் வேதங்கள் செவி வழியாகப் பேணப்பட்டு வந்தது என்பதனால் இதனை சுருதி, எழுதாமறை, எழுதாக்கிளவி என்றும் அபௌர்ஷம், ஆம்நேயம் என்று பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது.

இவ் வேதம் இருக்கு, யசூர், சாமம், அதர்வணம் என நான்கு வகைப்படும். இதிலே இருக்கு வேதம் என்பது இயற்கைத் தெய்வங்கள் பற்றிய பாடல்கள் என்றும் யசூர் வேதம் என்பது யாகங்கள் பற்றியது என்றும் சாம வேதம் என்பது மந்திரங்கள் என்றும் அதர்வண வேதம் என்பது மாந்திரிகம் என்றும் கூறுவர். இத்தகைய வேதங்கள் நான்கு வகையான உட்பிரிவுகளைக் கொண்டதாகும். அவை சங்கிதை, பிராமணம், ஆரண்யகம், உபநிடதம் என்பவையாகும்.

இதில் சங்கிதைகள் மற்றும் பிராமணங்கள் என்பன கர்ம காண்டப் பகுதியைச் சேர்ந்ததென்றும் ஆரண்யகம் என்பது உபாசனைக் காண்டத்தையும் மற்றும் உபநிடதங்கள் ஞான காண்டப்பகுதியைச் சேர்ந்தன என்று கூறுவர். மேலும் சங்கிதைகள் கடவுளை வாழ்த்திப் பாடுகின்ற மந்திரங்களாகவும், பிராமணங்கள் என்பது யாகத்தின்போது மந்திரமோதுகின்ற வேளையில் கடைப்பிடிக்கவேண்டிய அனுட்டானங்களைக் கூறுவதாகவும் ஆரண்யகம் என்பது கானகத்தை அடிப்படையாகக்கொண்ட துறவறத்தையும் உபநிடதம் என்பது சங்கிதைகள் மற்றும் பிராமணங்கள் என்பவற்றை விளக்கும் தத்துவங்களாகவும் காணப்படுகின்றது. மேலும் இவ்வேத காலத்திலே பல்வேறு வகையான தத்துவங்கள் பற்றியும் விபரிக்கப்பட்டுள்ளன.

**உபநிடதங்கள்**

பண்டைய தத்துவமாகவும், இந்து சமயத்தின் ஆதார நூலாகவும் விளங்கும் உபநிடதங்கள் வரலாற்றுக்காலங்களில் முதலில் எழுந்ததாகக் கருதப்படுகின்ற வேதங்களின் இறுதியில் தோன்றிய இலக்கியமாகும். அதாவது கி.மு. 10 - 06 நூற்றாண்டு வரையில் எழுச்சி பெற்றிருந்தன. இது வேதங்களின் இறுதியில் தோன்றியது என்பதால் வேதாந்தம் என்றும் அழைக்கப்படுகின்றது. இந்துமதம் பற்றி அறிந்துகொள்வதற்கு ஏதுவான நூல்களுள் ஒன்றான உபநிடதம் என்பது ''உபநிஷத்'' என்ற வடமொழிச் சொல்லில் இருந்து தோன்றியதாகும். இவ் உபநிஷத் என்ற சொல்லானது உப + நி + ஷத் என்று பிரிந்து ''உப'' என்பது அருகில் என்றும் ''நி'' என்பது சிரத்தை அல்லது ஆர்வம் என்றும் ''ஷத்'' என்பது உட்காருதல் என்றும் பொருள் கொள்வர். எனவே இதனடிப்படையிலே உபநிடதம் என்பது குருவுக்கு மிக அண்மையிலிருந்து குரு கூறுகின்ற மறைபொருட் தத்துவத்தை சிரத்தையுடன் கேட்டல் என்று பொருள்படுகின்றது.

இங்கு குருவுக்கு மிக அண்மையில் இருக்கும் சீடர்கள்கூட அறிவு மிக்கவர்களாகவும் பக்குவ நிலைப் பட்டவர்களாகவுமே காணப்பட்டனர். பக்குவப்பட்டவர்களை மட்டுமே ஆசிரியர்கள் தமது சீடர்களாகக் கொண்டனர். எனவே உபநிடதம் என்பதற்குச் சொல்லப்படுகின்ற குருவுக்கு மிக அண்மையில் இருந்து அவர் கூறுகின்ற மறைபொருட் தத்துவங்களைச் சிரத்தையுடன் கேட்டல் என்பது பொருத்தமாகவுள்ளது.

இது சாதாரண கருத்துக்கள் மட்டுமன்றி ஆராய்ந்து கூறப்பட்ட கருத்துக்கள் என்பவற்றைக் கொண்டமைந்ததனாலும் இதனை உபநிடதம் என்று கூறுவது மிகப் பொருத்தமானதாகும். வேதகால முதல் பகுதியினர் வளமான சிந்தனை மற்றும் அறிவுடையவர்களாகக் காணப்படவில்லை. இதனால் அவர்கள் இயற்கைக்குப் பயந்து அவற்றிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக இயற்கைச் சக்திகளுக்கு கற்பனையில் உருவ, நாமங்களை கொடுத்து வழிபட்டனர். ஆனால் காலப்போக்கில் சிந்தனை விருத்தியடையத் தொடங்கியபோது பல சிந்தனையாளர்கள் தோன்றி தமது சிந்திக்கும் ஆற்றலின் மூலம் அவ் வழிபாட்டு முறையைக் கண்டித்து அத்தெய்வங்கள் வணக்கத்துக்குரிய தெய்வங்கள் அல்ல என்று கூறித் தமது ஆராய்வை இறைவனைப் பற்றியதாக ஏற்படுத்தத் தொடங்கினர். இந்நிலைமையே உபநிடதங்களின் தோற்றத்துக்கு அடிப்படையாக அமைந்திருந்தன.

மேலும் வேதகால மக்கள் இயற்கை சக்திகளை கிரியைகளாலும், யாகங்களாலும் வழிபட்டனர். இவற்றைச் செய்வதன் மூலம் தாம் கேட்கின்ற வரங்களை இறைவன் தருவதாகவும் நம்பி அதனை மேற்கொண்டனர். எனினும் பிற்பட்ட காலத்தில் இவ்வழிபாட்டின் மீது வெறுப்பும் ஏற்பட்டது. காரணம் இங்கு யாகங்கள், கிரியைகளில் ஆடு, மாடு எனப் பெருந்தொகையான உயிரினங்கள் பலியிடப்பட்டன. இதனால் மக்கள் யாகங்களின் மீது தம் விரக்தியைக் காட்டலாயினர். இத்தகைய விரக்தியே உபநிடதங்களின் தோற்றத்துக்கும் அடிப்படையாக அமைந்திருந்தன.

இவ் உபநிடதங்களே பிற்பட்ட கால வைதீக, அவைதீக நெறிகள் அனைத்திற்கும் அடிப்படையாக அமைந்திருந்தன. மேலும் இந்திய மெய்யியலின் உண்மையியல், அறிவாராட்சியியல், ஒழுக்கவியல் போன்ற அனைத்துத் துறைகளுக்கும் உபநிடதங்களே பங்களிப்புச் செய்துள்ளன. மேலும் மேற்கத்தேய மெய்யியல் வரலாற்றில் பிரதான பங்களிப்புச் செய்யும் தோற்றப்பாட்டியல் வாதம், பொருள் கோளியல் போன்ற துறைகளிலும் உபநிடதங்களின் ஆழமான செல்வாக்கைக் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறு உபநிடதங்கள் தோன்றி இந்திய மெய்யியல் வரலாற்றிலே குறிப்பிடத்தக்களவு செல்வாக்குப் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறாக விளங்கும் உபநிடதம் வேதத்தின் இறுதிப்பகுதியாகும். அதாவது வேதங்கள் சங்கிதை, பிராமணம், ஆரண்யகம், உபநிடதம் என நான்கு உட்பிரிவுகளைக் கொண்டது. இதிலே உபநிடதம் என்பது இறுதியானதாகவும் இறுதிக் காலப்பகுதிக்குரியதாகவும் விளங்குகின்றது. எனவே இது வேதத்தை விடுத்து அமைந்த வேறொன்று அல்ல என்பது புலப்படுகின்றது. இதன் காரணமாக உபநிடதத்தை வேதாந்தம் எனவும் வேதத்தின் தலையாக விளங்குவதனால் இது வேதசிரசு என்றும் சம்பாசணைகளின்போது குருவும் சீடனும் தமக்கு மட்டும் விளங்கக்கூடிய வகையிலே சம்பாசிப்பதனால் இது இரகசியம் என்றும் அழைக்கப்படுகின்றது.

உபநிடதங்கள் சம்பாசணைகள், போதனைகள், விசாரம், வினாவிடை, தர்க்கம், செய்முறை, விளக்கம், ஐயத்திற்கான விளக்கம் பெறல் எனப் பல்வேறுபட்ட வடிவங்களிலே அமையப் பெற்றவையாகும். இந்திய மரபின் மெய்யியல், கலைகள், ஒழுக்கவியல், மானிடவியல், விஞ்ஞானம், சமயம் போன்ற அனைத்துத் துறைகளுக்கும் ஆதாரமாக இருக்கும் உபநிடதங்கள் வேதகாலத்தின் இறுதியில் தோன்றியதாகும். அதாவது வேதத்தின் உட்பிரிவுகளான சங்கிதை, பிராமணம், ஆரண்யகம், உபநிடதம் என்றவகையிலே இது இறுதிப்பகுதியில் தோன்றியிருந்தது. ஆரம்பத்தில் தோன்றிய உபநிடதங்கள் வசனநடையிலும், பிற்பட்டவை செய்யுள் வடிவிலும் அமையப்பெற்றிருந்தன. மேலும் இவை சம்பாசணைகள், போதனைகள், விசாரம், வினாவிடை, தர்க்கம், செய்முறை, விளக்கம், சந்தேகமெழுப்பி விளக்கம் பெறல் எனப் பல்வேறுபட்ட வடிவங்களிலே அமையப் பெற்றவையாகும் என்று கூறுவர்.

குருவுக்கு மிக அண்மையிலிருந்து அவர் கூறுகின்ற மறை பொருட் தத்துவங்களைக் கேட்டு அஞ்ஞானமென்ற இருளை அகற்றி பிரம்மஞானத்தைப் பெற்றுக்கொள்வதன் பின்னணியில் தோன்றிய இவ் உபநிடதங்கள் 200க்கும் மேற்பட்டவையாகும் என்றும் அதிலே 108 உபநிடதங்கள் சிறப்பானவை என்று முத்திக்கோ உபநிடதத்தில் ராமபிரான் ஆஞ்சநேயருக்குக் கூறியதாகச் சொல்லப்படுகின்றது. அவற்றிலே 12 உபநிடதங்கள் பிரதானமானவை என்றும் அவற்றுள் 10 சிறப்பானவை என்றும் சொல்லப்படுகின்றது. அவையாவன,

01. ஈச உபநிடதம்
02. கடோ உபநிடதம்
03. கேன உபநிடதம்
04. முண்டக உபநிடதம்
05. மாண்டுக்கிய உபநிடதம்
06. தைத்திரிய உபநிடதம்
07. சாந்தோக்கிய உபநிடதம்
08. பிருகதாரண்ய உபநிடதம்
09. ஐதரேய உபநிடதம்
10. பிரசன்ன உபநிடதம்

11. கௌசிக உபநிடதம்
12. சுவேதாஸ்வர உபநிடதம்

இவை தோற்றத்தின் அடிப்படையில் பழங்கால உபநிடதங்கள், இரண்டாம் காலகட்ட உபநிடதங்கள், மூன்றாம் காலகட்ட உபநிடதங்கள், நான்காம் காலகட்ட உபநிடதங்களென 4 கட்டங்களாகப் பிரிக்கப்படுகின்றன.

**உபநிடதங்கள் போதிக்கும் ஒழுக்கவியல் சிந்தனைகள்.**

ஒழுக்கம் என்பது ஒரு சமூகத்திற்கு மிகவும் முக்கியமான ஒன்றாகும். இதனை மெய்யியல் ரீதியாக Ethics என்று கூறுகின்றனர். இவ் ஒழுக்கமானது மதத்திற்கு மதம், இனத்திற்கு இனம் வேறுபட்டதாக இருந்தாலும் ஒழுக்கமென்பது அனைவராலும் கடைப்பிடிக்கப்படுகின்ற ஒரு பொதுவான அம்சமாகும். ஒரு சமூகத்திலுள்ள ஒழுக்கமே அச் சமூகத்தினது சிறந்த குறிகாட்டியாகும். அங்கு நிலவும் ஒழுக்கத்தைக் கொண்டே அச் சமூகத்தினது தன்மை தீர்மானிக்கப்படுகின்றது.

பெரும்பாலும் ஒழுக்கம் என்ற விடயத்திலே அடங்குபவைகளாக நன்மை என்றால் என்ன, தீமை என்றால் என்ன, எதனைச் செய்ய வேண்டும், எதனைச் செய்யக்கூடாது, எது சிறந்த இன்பம், எந்த செயல் மூலம் நாம் புகழடையமுடியும், எந்த செயல் வாழ்க்கையின் இறுதி இலட்சியத்தை அடைய வழி செய்யும் போன்ற கருத்துக்கள் காணப்படுகின்றன. எனவே ஒழுக்கமில்லாமல் எதுவுமில்லை. இதனால்தான் ''ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்'' என்று கூறுகின்றனர்.

மக்களின் நோக்கம் தம் வாழ்வில் மெய்ப்பொருளாகிய இறைவனை அடைவதாகும். அதற்கு அவன் தன் வாழ்விலே கடைப்பிடிக்கின்ற ஒழுக்க நெறிமுறைகளே வழி செய்கின்றன. இவ் ஒழுக்க நெறிமுறைகள் பற்றி உபநிடதங்கள் சிறப்பாகக் கூறுகின்றன. இங்கு ஒழுக்கம் என்பது வாழும் முறை அல்லது வாழ்க்கை நெறி எனப்படுகின்றது. இவ்வாறு தனியே இறைவனை மட்டுமே கூறாது மனிதனில் செல்வாக்குச் செலுத்தும் ஒழுக்கம் போன்ற தத்துவக் கருத்துக்களைப் பற்றி கூறுவதனால் இவை மெய்யியல் ரீதியாக ஆராய முற்படுவது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு ஒழுக்கம் பற்றி ஆராய்கின்ற போக்கினை மேலைத்தேய மரபில் சோக்கிரட்டீஸ், பிளேட்டோ, அரிஸ்ரோட்டில் போன்ற மெய்யியலாளர்களின் சிந்தனைகளிலும் காணமுடிகிறது.

உபநிடதங்கள் பேசுகின்ற தத்துவங்களிலே கன்மம், மறுபிறப்புக் கோட்பாடு மிகவும் முக்கியமானதாகும். இதிலே ஒழுக்கம் பற்றி விதந்துரைக்கப்பட்டுள்ளது. அதாவது மறுபிறப்புப் பற்றிய சிந்தனையே ஒரு மனிதனை ஒழுக்கமுடையவனாக வாழத் தூண்டுகின்றது. மேலும் நன்மை, தீமை, பாவம், புண்ணியம், இன்பம், துன்பங்களை விளக்கி அவற்றைக் கர்மக் கோட்பாடாகச் சிறப்பித்துக்கூறி அதனால் மறுபிறவி உண்டென்ற கொள்கையையும் முக்கியப்படுத்துகிறது. இங்கு மனிதன் தன் வினைப் பயனிற்கேற்பவே பிறவியெடுக்கின்றான் என்றும் கூறப்படுகின்றது. எனவே இதன்மூலம் வினைப்பயனை எல்லோரும் அனுபவித்தேயாக வேண்டும் என்று பிருகதாரண்ய உபநிடதம் கூறுகின்றது. இதனால் எந்தச் செயலைச் செய்வதாயினும் அதன் விளைவை ஆராய்ந்தே செய்ய முற்படுவர். எனவே மக்கள் பிழையான வழிகளுக்குச் செல்லாது ஒழுக்கமுடையவர்களாக வாழ முற்படுவர். அத்துடன் உபநிடதக் கருத்துக்கள் மனிதனை நல் வழிக்கும் இட்டுச் செல்கின்றன.

உபநிடத மகா வாக்கியங்கள் மூலமாக ஒழுக்கக் கருத்துக்கள் குறிப்பிடப்படுவதனைக் காணலாம். தத்துவமஸி, அகம் பிரம்மாஸ்மி, சோகமஸ்மி போன்ற கருத்துக்கள் மூலமாக அனைவரிலும் தெய்வீகம் இருக்கின்றது என்ற கருத்து வெளிக்காட்டப்படுகின்றது. எனவே ஆன்மாக்கள் அனைத்துமே வணங்கப்பட வேண்டியவை என்ற கருத்துப் புலப்படுத்தப்படுகின்றது.

வினைப்பயனிலிருந்து நீங்குவதானால் பந்த பாசங்களிலிருந்து நீங்க வேண்டும். இதற்கு இறைவனருள் வேண்டும். பக்தி மார்க்கத்தின் மூலமே இதனை அடையமுடியும். பக்தி மார்க்கத்தின் மூலம் இறையருளை அடையமுடியும். எனவே பக்தியைப் பின்பற்ற ஒழுக்கம் அவசியம். எனவே பக்தியினூடாக ஞானத்தைப் பெற்று ஞானத்தினூடாகவே இறைவனை அடையமுடியும். எனவே இதன் மூலமாக ஒழுக்கக் கருத்துக்கள் முதன்மைப் படுத்தப்படுகின்றன.

இங்கு ஞான மார்க்கமாகிய பற்றற்ற வினைகள் மக்களின் முத்திக்கு வித்திடுகின்றன எனலாம். அதாவது சுய நன்மை கருதாது உலகப்பற்றிலிருந்து நீங்கி இறையர்ப்பணமாகச் செயலாற்றுவதனைக் குறிக்கிறது. அதாவது நன்மை கருதிச் செய்தால் மறுபிறவி எடுப்பர் என்றும், பிராமணர்களுக்கு அதிக தட்சணை கொடுப்பவன் மறுவுலகிலே உணவுப்பற்றாக்குறை ஏற்பட்டு மீண்டும் இறக்க நேரிடும் என்றும் நான், எனது என்ற குறுகிய எண்ணம் கெட செயற்படவேண்டும் என்றும் கூறப்படுகின்றது. இதன்மூலம் மக்கள் தம் வாழ்விலே முத்தியடையச் செய்யவேண்டியது எதுவென அறிந்து ஒழுக்கமுடையவர்களாக வாழ முயல்கின்றனர்.

மேலும் நல்லொழுக்கமுடையவர்கள் நல்ல கருப்பையில் புகுவர் என்று சாந்தோக்கிய உபநிடதம் கூறுகின்றது. அதாவது பிராமணர், சத்திரியர், வைசியர் போன்றோரின் கருப்பையிலே புகுந்து பிறவியெடுப்பர் என்கிறது. அத்தோடு நற்செயலின் பயனை சுவர்க்கத்தில் அனுபவித்துவிட்டு இவ்வுலகில் பிறக்கின்றனர் என்று முண்டக உபநிடதம் கூறுகின்றது. இவ்வாறு கூறப்படுவதன் மூலம் மக்கள் தம் இறப்புக்குப் பின்னரான நிலையை எண்ணி அதன் மீதுள்ள பயம் காரணமாக மக்கள் ஒழுக்கசீலர்களாக வாழ முற்படுவர்.

உபநிடதங்கள் முத்திக்குரிய வழியாக ஒழுக்கத்தையே காட்டுகின்றன. நிலையானவை மற்றும் நிலையற்றவற்றை பிரித்துணர்தல், சுயநலம் விடுத்தல், தன்னம்பிக்கை, மன அமைதி, தன்னடக்கம், துறவு, பொறுமை போன்ற விடயங்களைத் தன்னகத்தே வளர்ப்பதன் மூலம் முத்தியைப் பெற்று இறைவனை அடைய முடியும். இவை தவிர சிரவணம், மனனம், நிருத்தியாசனம் போன்றவற்றையும் முத்திக்கான வழிமுறைகளையும் காட்டுகின்றது. மேலும் முத்திக்குச் சிறந்த வழி தியானம் என முண்டக உபநிடதம் கூறுகின்றது. எனவே இதன் மூலமாக உபநிடதங்களில் ஒழுக்கக் கருத்துக்கள் முதன்மைப் படுத்தப்படுகின்றமை அறியத்தக்கது.

உபநிடதங்களில் உள்ள சத்திய காமன், ஜயபாலா போன்றோர் கதையின் மூலம் ஒருவரின் பிறப்பு எவ்வாறு இருந்தாலும் நல்லொழுக்கத்தை உடையவர்கள் உயர்ந்த சாதியினராகனவே கருதப்படுகின்றனர். அதாவது தமது ஆரம்பக் கல்வியை கற்பதாக இருந்தால் குருவிடம் தமது வர்ணத்தை குறிப்பிட வேண்டும். ஆனால் சத்தியகாமன் தன் தந்தை யாரெனத் தெரியாது என்று கூறினான். எனவே உண்மை கூறியதனால் நீ உயர்ந்த குலத்திலே பிறந்திருக்கவேண்டும் என்று கூறிக் குரு கல்வி போதித்தார். எனவே இதன்மூலமாக இதில் உண்மை பேசவேண்டும் என்ற ஒழுக்கத் தத்துவம் புலப்படுத்தப்படுகின்றமையை காணலாம்.

தைத்திரிய உபநிடதத்தில் ஒரு மனிதன் தன் வாழ்விலே யார் யாரை வணங்க வேண்டும் என்பது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது கடவுளை மட்டுமன்றி தாய், தந்தை, குரு போன்றோரை வணங்க வேண்டும் என்று கூறப்படுகின்றது. இதனை மாத்ரு தேவோ பவ – தாயைத் தெய்வமாகப் போற்று, பித்ரு தேவோ பவ – தந்தையைத் தெய்வமாகப் போற்று, ஆச்சார்ய தேவோ பவ – குருவைத் தெய்வமாகப் போற்று என்ற வாக்கியங்கள் மூலம் அறிந்துகொள்ள முடியும். இதன்மூலம் யார் எவரை வணங்க வேண்டும், யாருக்குப் பணிந்து நடக்க வேண்டும் அதாவது பெரியோரைக் கனம் பண்ணுதல் போன்ற கருத்துக்கள் புலப்படுத்தப்படுகின்றன. எனவே இதன் மூலமாக உபநிடதங்களில் ஒழுக்கக் கருத்துக்கள் முதன்மைப் படுத்தப்படுகின்றன.

மேலும் சத்தியம் வத – உண்மையைப் பேசு, தர்மம் வத – தர்மம் செய் போன்ற மகா வாக்கியங்கள் மூலம் உபநிடதத்தில் சிறந்த ஒழுக்கக் கருத்துக்கள் வெளிப்படுத்தப்படுவது புலப்படுகிறது. எனவே இதன் மூலமாக உபநிடதம் ஒருவனை சிறந்த மனிதனாக வாழ வழி செய்கிறது. அதாவது உண்மையைப் பேசி தன் வாழ்விலே புகழடைந்து இறைவனின் அருளையும் பெறுகிறான். இதுபோன்றே தர்மம் செய்து மற்றவர்களுடன் இணைந்து வாழ்ந்து, இல்லாதவர்களுக்கு தானம் கொடுப்பதன் மூலம் வாழ்விலே புண்ணியத்தையும் சேர்த்துக் கொள்கிறான். இதன் மூலமாக அவன் தன்னுடைய வாழ்வின் இறுதி நோக்கமான முத்தியையும் பெறுகிறான். ஓதுவது ஒழியேல், அறம் செய், எந்த செயல் குற்றமற்றவையோ அவற்றை மட்டுமே செய்ய வேண்டும் போன்ற கருத்துக்கள் மனிதனை அறவானாக்குகின்றது. இதனால் சமூகத்திலே குற்றங்கள் குறைந்து சிறந்த சிந்தனைப் போக்குடையவர்களாக மக்கள் வாழ்கின்றனர். எனவே உபநிடதங்கள் சிறந்த ஒழுக்க வழிகாட்டியாக அமைகின்றது.

செல்வத்தைப் புறக்கணிக்காதே, விருந்தினரைத் தெய்வமாகக் கருது, உனக்காக மட்டுமன்றி நாட்டிற்கும் பயன்படுமாறு ஏராளமான உணவினை உருவாக்கு, எவருக்கும் உணவு இல்லை என்று சொல்லாதே எவருக்கும் இடமில்லை என்று கூறாதே, நீ கொடுக்கும் ஒவ்வொன்றையும் அன்போடும் நம்பிக்கையோடும் கொடு, என்னிடம் பின்பற்றிய பழக்கவழக்கங்களை நீ வாழ்நாள் முழுவதும் பின்பற்ற வேண்டும் என்பன போன்ற கருத்துக்கள் இங்கு புலப்படுத்தப்படுகின்றன. இதன்மூலம் பசி, பட்டினி அதாவது ஏழ்மை இருக்கக்கூடாது என்பதனையும், தர்மம் செய்ய வேண்டும் போன்ற கருத்துக்களைச் சுட்டிக்காட்டுவதாக அமைவதனைக் காணமுடிகிறது. எனவே உபநிடதங்கள் சமூக சமநிலையை விரும்புவதோடு ஏழ்மை நிலையை நீக்கிச் சமநிலையை ஏற்படுத்தவேண்டுமென முயல்வதையும் காணமுடிகிறது.

வேதம் கூறும் யாகக் கிரியைகளை உபநிடதம் கண்டித்து அறிவோடு கூடிய கிரியைகளுக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றது. அதாவது கிரியைகளும், அறிவும் ஆன்மீக ஈடேற்றத்திற்கு உதவுகின்றது என்ற கருத்தையே இது புலப்படுத்துகின்றது. இதனையே ஞான சமுச்சயம் "ஞானமின்றிக் கிரியை செய்பவன் காரிருளில் கிடக்கிறான்" என்றும் செய்யவேண்டிய கடமையைச் செய்யாது வேதாந்த ஆராய்ச்சியில் ஈடுபடுபவர்கள் அதைவிடப் பெரிய அந்தகாரத்தில் மூழ்குவர் என்று கூறுகின்றது. எனவே இவ்வாறு அறிவு ரீதியாகச் சிந்திக்க வைத்திருப்பதன் மூலம் வேத காலத்தில் மேற்கொள்ளப்பட்ட யாகக் கிரியைகள் எதிர்க்கப்படுவதோடு யாகத்தின்போது மேற்கொள்ளப்படும் பலியிடுதல் நடவடிக்கையும் எதிர்க்கப்படுவது புலப்படுத்துகின்றது. இதன் மூலமாக ஏனைய உயிர்கள் மதிக்கப்படுவதைக் காணமுடிகிறது. இதன்மூலம் உயிர்களிடத்தில் அன்பு செலுத்த வேண்டும் என்ற ஒழுக்கக் கருத்து மக்களுக்கு உபநிடதத்தின் மூலம் மக்களுக்கு எடுத்துக் கூறப்படுகின்றது.

கடோபநிடதத்தில் நசிகேதன் தன் தந்தையிடம் கிழட்டுப் பசுக்களைத் தானம் செய்யவேண்டாம் என வேண்டினான். இது அவனது ஒழுக்கப் பண்பைக் காட்டுகின்றது. எனவே உபநிடதங்களில் உள்ள ஒழுக்கக் கருத்துக்கள் ஒருவனின் ஆன்ம ஈடேற்றத்திற்கு வழிகாட்டுபவையாக உள்ளன எனலாம்.

எனவே இவ்வாறாக உபநிடதங்கள் சமயம்சார் கருத்துக்களாக இருந்தாலும் அவற்றில் ஒழுக்கக் கருத்துக்களே நிரம்பிக் காணப்படுகின்றன. இந்த நிலை மக்களை சிறந்த ஒழுக்கமுடையவர்களாக வாழ வைக்க உதவும் எனலாம். இதனால் மக்கள் நெறி தவறாது, குற்றங்களையும் புரியாது எந்தச் செயல் அவர்களை இறைவனிடம் கொண்டு சேர்க்குமோ அச் செயலில் ஈடுபட்டு தமது வாழ்வின் நோக்கமான மோட்சத்தையும் அடைந்து கொள்வர்.

**முடிவுரை**

ஒரு சமூகத்திலே, அந்த சமூகத்தின் நிலவுகைக்கு மனிதன் எப்படி முக்கிய அங்கமாகத் திகழ்கின்றானோ அந்தளவுக்கு ஒழுக்கமும் ஒரு சமூகத்திலே செல்வாக்குச் செலுத்துகின்றது. ஏனெனில் மனிதனையும், மனிதர்களால் நிரம்பிய சமூகத்தையும் தீர்மானிப்பது இவ் ஒழுக்கமே ஆகும். அதாவது அவ்வொழுக்கத்தைக் கொண்டே அச் சமூகத்தின் தன்மை தீர்மானிக்கப்படுகின்றது. இத்தகைய ஒழுக்க நெறியானது உபநிடத காலத்திலே சிறப்பாக விளக்கப்படுகின்றது. ஆய்வு விதிமுறைகளைப் பின்பற்றி மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வானது ஆய்வுப் பிரச்சினையை இனங்கண்டு, கருதுகோள்களை அமைத்து, உரிய ஆய்வு முறையியல்கள் மூலம் பரிசீலனைக்குட்படுத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கருதுகோளில் வலியுறுத்தப்பட்ட விடயங்கள் விரிவான ஆய்வில் வாய்ப்புப் பார்க்கப்பட்டு அவை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

சமகாலத்துடன் உபநிடத காலத்திலே குறிப்பிடப்பட்ட அதே ஒழுக்கத்தை ஒப்பு நோக்குவோமாயின் இன்று அவை முற்று முழுதாகப் பின்பற்றப்படுவதில்லை. இருப்பினும் முழுவதுமே இல்லாது ஒழிந்துவிட்டது என்று கூறமுடியாது. காரணம் உபநிடதத்தில் கூறப்பட்ட சிறிதளவு ஒழுக்கக் கூறுகள் இன்றும் பின்பற்றப்பட்ட வண்ணம் உள்ளன. இருந்தும் சில விடயங்கள் மறைந்துள்ளமையும் கவலைக்குரிய விடயமேயாகும்.

அந்தவகையிலே பற்றற்ற வினை என்ற விடயத்தை எடுத்துக்கொணடால் இன்று பற்றற்ற வினை செய்பவன் என்று எவருமில்லை. காரணம் இன்று எல்லோரும் தன்னலப் பற்றும் உலகப்பற்றும் உடையவர்களாக மாறி

இறைவனைப்பற்றிய சிந்தனையற்றவர்களாக மாறிவிட்டனர். இச்சிந்தனைகளே இன்றைய உலகை அழிவுக்கு இட்டுச்செல்கின்றன.

முற்காலத்து மக்கள் பந்த பாசங்களுக்குக் கட்டுப்பட்டவர்களாவர். ஆனால் இன்று பந்தம், பாசம் என்பவற்றுக்கு சற்றும் இடமில்லாது போய்விட்டது. காரணம் மக்களுக்கு பந்தம், பாசங்களைவிட பணத்தின் மீதான பாசமே அதிகமாகக் காணப்படுகின்து. இதனால் பணம், பணம் என்று அலைந்து இறுதியில் தனக்கான அழிவையும் தேடிக்கொள்கின்றனர்.

மேலும் உபநிடதத்தில் முத்திக்கு வழியாக ஞான மார்க்கம் பற்றி வலியுறுத்தப்பட்டுள்ளது. அதனைப் பின்பற்றி மக்கள் முத்தியையும் அடைகின்றனர். ஆனால் இன்றோ இவையெல்லாம் கணக்கில் கொள்ளப்படுவதில்லை. அத்தோடு பிராமணரகளுக்கு அதிக தட்சணை அதிகமாகக் கொடுக்கக் கூடாது என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கேற்பவும் மக்கள் நடந்து கொண்டனர். ஆனால் இன்றோ அதிக தட்சணை கொடுக்காது எந்தப் பிராமணர்களையும் கொண்டும் எந்த வேலையும் செய்ய முடியாத நிலையே காணப்படுகின்றது. எனவே ஒழுக்கம் கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளன.

உபநிடதத்தில் தாய், தந்தை, குரு போன்றோரை வழிபட வேண்டும் எனக் கூறிப்பிடப்பட்டுள்ளன. இதனை மக்கள் கடைப்பிடித்தும் வாழ்ந்தனர். ஆனால் இன்றோ பெரியவர்களை மதிக்கும் பழக்கமே இல்லாது ஒழிந்துவிட்டது. அத்தோடு அவர்களை உதாசினம் செய்கின்றனர். மேலும் அமைதி, சுயநலமில்லாது செயற்படல், தன்னலமின்மை, தரமம் போன்ற விடயங்கள் முதன்மைப்படுத்தப்பட்டன. ஆனால் இந்நிலைமையை இன்று காண முடிவதில்லை. இருந்தும் அனைவரையும் பிழையானவர்கள் என்று குறிப்பிடவும் முடியாது. காரணம் ஒருசிலர் சில ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதும் உண்டு.

யாகம், பலி போன்ற விடயங்கள் தவிர்க்கப்பட வேண்டும் எனப்படுகிறது. அதற்கிணங்க அன்று தொட்டு இன்றுவரையிலும் சிறப்பாகச் சொல்லக்கூடிய விடயமாக இவை பின்பற்றப் படுவதைக் காணலாம். அந்தவகையிலே உபநிடத கால ஒழுக்கக் கருத்துக்கள் தற்காலத்திலே மாற்றம் பெற்றிருக்கும் அதேவேளை சில ஒழுக்கக் கருத்துக்கள் இன்றும் பின்பற்றப்படுவதைக் காணலாம். எனவே காலத்துக்கு காலம் ஏற்பட்ட மாற்றங்கள் சில ஒழுக்கக் கருத்துக்களில் செல்வாக்குச் வெலுத்தியிருப்பதையும், சில தன் செல்வாக்கை நிலைநாட்டி காலத்தை வென்று நிற்பதையும் காணலாம்.

**உசாத்துணை**


1. Surendranath Dasgupta (1992) A History of Indian Philosophy, Molilal Banarsidass Publisher Private Limited, Delhi.
2. Jaduncth Sinha (1999) Out lines of Indian Philosophy, Pilgrims books Pvt. Ltd, Delhi.
3. மிருணாள் காந்தி காங்கோபாத்யாயா, மொ.பெ. சா. ஜெயராஜ் (2011) இந்தியாவில் மெய்யியல், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட், சென்னை – 600098.
4. சொக்கலிங்கம், க. (2009) இந்து நாகரிகம் குமரன் புத்தக இல்லம்: கொழும்பு.
5. மனோகரன், த. (2007) இந்து நாகரிகம் யுனி ஆர்ட்ஸ் நிறுவனம், கொழும்பு.
6. லக்ஷ்மணன்,கி., (2005) இந்திய தத்துவ ஞானம் பழனியப்பா பிரதஸ், சென்னை.
7. மகாதேவன், ரி, எம், பி. (2001) இந்து சமயத் தத்துவம் குமரன் புத்தக இல்லம், கொழும்பு – சென்னை.
8. ஹரியண்ணா எம், (1966) இந்தியத் தத்துவம் தமிழ் வெளியீட்டுக் கழகம், தமிழ் நாடு.
9. anbutanravi.blogspot.is…12. 11.2017. 8.00 pm.

10. ta.m.wikipedia.org .. 12. 11. 2017. 8.45. pm.